ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ  அதி விசேஷமானது


අංක 2382/24 – 2024 මැයි මස 03 වැනි සිකුරාදා – 2024.05.03

2382/24 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

*ச.வ.பி 21/1978*(X)(D)

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*25 அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ.டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும், பட்டம் அளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட கொழும்பு 07, மலலசேகர மாவத்தை, 30ஏ என்னும் இலக்கத்தில் அமைந்துள்ளதுமான இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ஐசீஏஎஸ்எல்) தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு-

(1) சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2022, ஒற்றோபர் 19 ஆந்திகதிய 2302/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2013, மாச்சு 12 ஆந் திகதிய 1801/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை இக்கட்டளை மூலம் பின்வருமாறு திருத்துகின்றேன்:-

(அ) "இதற்கான அட்டவணையின்" என்பதிலிருந்து "இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்" என்பது வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "இதற்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டனவும் அவற்றின் சுருக்கீடுகள் முறையே அட்டவணை II இன் நிரல் II இல் நேரொத்த பதிவுகளில் தரப்பட்டுள்ளனவுமான பட்டங்களை அளிப்பதற்கு




இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இட்டுச்செல்கின்ற அதன்கண் உயர்கல்வியை அபிவிருத்திசெய்யும் நோக்கத்துக்காக பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தை (ஐசீஏஎஸ்எல்) இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமையவும் ஏற்றங்கீகரிக்கின்றேன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அக்கட்டளைக்கான அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணைகளை இடுவதன் மூலமும்:-

"அட்டவணை I"

நிபந்தனைகள்

1. இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ஐசீஏஎஸ்எல்) ஆனது, குறைந்தபட்சம் 120 திறமை மட்டங்கள் (SLQF மட்டம் 6) மூலம் பூர்த்தி செய்யப்படும் பிரயோக கணக்கியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி மற்றும் குறைந்தபட்சம் 90 திறமை மட்டங்கள் ( SLQF மட்டம் 5) மூலம் பூர்த்திசெய்யப்படும் பிரயோக கணக்கியலில் விஞ்ஞான இளமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாணவர்களைச் சேர்க்கும் போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்-

(அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) அல்லது அதற்குச் சமமான தகைமை; அத்துடன்

(ஆ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த (சாதாரண தரப்) பரீட்சையில் கணிதத்துக்கு "திறமைச் சித்தி" அல்லது அதற்குச் சமமான தகைமை.

2. இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ஐசீஏஎஸ்எல்) ஆனது குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் பரிசீலனைக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

அட்டவணை II

| நிரல் I<br>பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | நிரல் II<br>பட்டங்களுக்கான சுருக்கீடு |
|---|---|
| பிரயோக கணக்கியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சீ சிறப்பு ஏஏ |
| பிரயோக கணக்கியலில் விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சீ ஏஏ |

(2) 2022, ஒற்றோபர் 19 ஆந் திகதிய 2302/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கின்றேன்; அத்துடன்

(3) இக்கட்டளை 2022, ஒற்றோபர் 19 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என வெளிப்படுத்துகின்றேன்.

கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2024, ஏப்பிறல் 25.

EOG 05 - 0011